ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2220/36 - 2021 මාර්තු මස 23 වැනි අඟහරුවාදා - 2021.03.23
*2220/36 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல்*

*காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமாகிய) 12, 14 மற்றும் 22 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 03 ஆந் திகதிய 2152/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 08/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் ஊடாக விதிக்கப்பட்ட பின்வரும் கட்டளை 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதாக இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.*

**எஸ். ஆர். ஆட்டிகல,**
*செயலாளர்,*
*நிதி அமைச்சு.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, மாச்சு 23.*


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

1. தீர்வை வரிகளற்ற கடைகளில் வெளிநாட்டு நாணய அலகுகளில் விற்பனை செய்வதற்காக அல்லது மீள் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற வெளிநாட்டு மதுபானங்கள் நீங்கலாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு தொகை லீற்றர் வெளிநாட்டு மதுபானமும் அவை இறக்குமதி செய்யப்படுகின்ற போது, பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் மதுவரியொன்று அறவிடப்படுதல் வேண்டும்.

**அட்டவணை**

| இ. மு. தலைப்பு | இ. மு குறியீடு | | விபரம் | அளவுக் கூறு | ICL/ SLSI | மதுவரி (தொகை லீற்றர் ஒன்றுக்கு (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| 22.03 | | | மோல்ட்டிலிருந்து தயாரிக்கப்படும் பியர் | | | |
| | 22.03.00.10 | - | 350 மி. லீற்றருக்கு குறைந்த அளவினைக் கொண்ட தகரத்தில் அடைக்கப்பட்ட பியர் | | | 135.00 |
| | 22.03.00.20 | - | 350 மி. லீற்றர் அல்லது அதற்குக் கூடுதலான அளவினைக் கொண்ட தகரத்தில் அடைக்கப்பட்ட பியர் | லீற்றர் | | 135.00 |
| | 22.03.00.90 | - | பிற | லீற்றர் | | 135.00 |
| 22.04 | | | புதிய திராட்சை வைன், சத்துக்கள் சேர்க்கப்பட்ட வைன் உட்பட ; தலைப்பு 20.09 இன் கீழ் வகைப்படுத்தியவை நீங்கலாக திராட்சைப் பழச்சாறு | | | |
| | 22.04.10.00 | - | ஸ்பார்கிலிங் வைன் | லீற்றர் | | 230.00 |
| | | - | வேறு வைன் ; மதுசாரம் சேர்த்து நொதித்தல் தடுக்கப்பட்ட அல்லது நிறுத்தப்பட்ட புதிய திராட்சைப் பழச்சாறு : | | | |
| | 22.04.21.00 | - | 2 லீற்றர் அல்லது அதற்குக் குறைவாக உள்ள கொள்கலன்களில் அடைக்கப்பட்டவை | லீற்றர் | | 230.00 |
| | 22.04.22.00 | -- | 2 லீற்றர்களுக்கு மேற்பட்ட ஆனால் 10 லீற்றர்களுக்கு மேற்படாத அளவினைக் கொண்ட கொள்கலன்களிலானவை | | | 230.00 |
| | 22.04.29.00 | -- | பிற | லீற்றர் | | 230.00 |
| | 22.04.30.00 | - | பிற புதிய திராட்சைப் பழச்சாறு | | | 230.00 |
| 22.05 | | | வேர்மவுத்தும் அரோமற்றிக் பதார்த்தங்கள் அல்லது தாவரங் களால் மணமூட்டப்பட்ட பிற புதுத் திராட்சை வைன்களும் | | | |
| | 22.05.10.00 | - | 2 லீற்றர் அல்லது அதற்குக் குறைவான கொள்கலன்களில் அடைக் கப்பட்டவை | லீற்றர் | | 230.00 |
| | 22.05.90.00 | - | பிற | லீற்றர் | | 230.00 |
| 22.06 | 22.06.00.00 | | நொதிக்க வைத்த பிற பானங்கள் (உதாரணமாக சைடர், பெர்ரி, மீட், சகே) : நொதிக்க வைத்த பானங்களினது கலவைகள் மற்றும் நொதிக்க வைத்த பானங்களினது கலவைகளும் மதுசாரமற்ற பானங்களும், வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை அல்லது உள்ளடக்கப்படாதவை. | | | |
| | 22.06.00.10 | ---- | மதுசாரம் (அல்ககோல்) உள்ளடக்கப்படாத குடிபானங்கள் | லீற்றர் | | 650.00 |
| | 22.06.00.90 | ---- | பிற | லீற்றர் | | 230.00 |
| 22.08 | | | 80% வீதக் கனவளவுக்குக் குறைந்த மதுசார வலுவுடைய (இயல் பிழக்காத ஈதைல் மதுசாரம், மதுசாரங்கள், செறி மதுபானங்களும் ஏனைய மதுசாரக் குடிபானங்களும் | | | |
| | 22.08.20.00 | - | திராட்சை வைன் அல்லது திராட்சைச் சக்கையில் இருந்து வடிகட்டல் மூலம் பெறப்பட்ட மதுசாரங்கள் | லீற்றர் | | 650.00 |
| | 22.08.30.00 | - | விஸ்கி வகைகள் | லீற்றர் | | 650.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *தலைப்பு இலக்கம்* | *இ. மு குறியீடு* | | *விபரம்* | *அளவுக் கூறு* | *ICL/ SLSI* | *மதுவரி (தொகை லீற்றர் ஒன்றுக்கு (ரூபா)* |
|---|---|---|---|---|---|---|
| | | - | கரும்பு உற்பத்திகளை புளிக்க வைத்து நுரைக்கச் செய்து காய்ச்சி வடிக்கப்பட்டவைகளால் பெறப்பட்ட றம்மும் மற்றும் ஏனைய மதுபானங்களும் : | | | |
| | *22.08.40.10* | --- | றம் | லீற்றர் | | *650.00* |
| | *22.08.40.90* | --- | பிற | லீற்றர் | | *650.00* |
| | *22.08.50.00* | - | ஜின்னும் ஜெனிவாவும் | லீற்றர் | | *600.00* |
| | *22.08.60.00* | - | வொட்கா | லீற்றர் | | *600.00* |
| | *22.08.70.00* | - | லிகுஆர்களும் (திரவங்களும்) மற்றும் கோர்டியல்களும் | லீற்றர் | | *600.00* |
| | *22.08.90.00* | --- | பிற | | | |
| | *22.08.90.10* | - | தென்னை சார் மதுசாரம் | லீற்றர் | | *600.00* |
| | *22.08.90.90* | --- | பிற | லீற்றர் | | *650.00* |

2. இங்கு அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தினை வெளிநாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்யும் நோக்கில் மதுவரி ஆணையாளர் நாயகத்திடம் சமர்ப்பித்ததன் பின்னர், இங்கு அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாம்.

3. விண்ணப்பதாரர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பில் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுராவிடின், அது தொடர்பான காரணம் விளக்கப்பட்டு, விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்ற ஐந்து நாட்களில் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

4. இங்கு அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி எந்தவொரு வெளிநாட்டு மதுபானமும் இறக்குமதி செய்யப்படலாகாது.

5. வெளிநாட்டு மதுபானங்கள் இறக்குமதி அனுமதிப்பத்திரமின்றி இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படின், மேற்குறித்த வரிக்கு மேலதிகமாக கிரய, காப்புறுதி, கேள்வு பெறுமதியில் (CIF) 3% இனை மேலதிக அறவீடாக அறவிடவோ அல்லது இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத் தொகையை அரசுடமையாக்குவதற்கோ மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு முடியும்.

6. இங்கு அட்டவணை III இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அதிகாரம் பெற்ற சுங்க அலுவலர் ஒருவரினால் சான்றுபகரப்பட்ட சுங்க சான்றிதழொன்று மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு வெளிநாட்டு மதுபானங்களை இறக்குமதி செய்யும்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

7. இங்கு அட்டவணை III இல் தரப்பட்டுள்ள சுங்க சான்றிதழினை மதுவரி ஆணையாளருக்கு அனுப்பியதனைத் தொடர்ந்து, இங்கு அட்டவணை IV மற்றும் V இல் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களை விடுவிக்கும் வகையில் அதனைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என்பனவற்றிற்கான மதுவரி செலுத்தியமைக்கான சான்றிதழ் வழங்கப்படுதல் வேண்டும். கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என்பனவற்றிற்காக மதுவரி செலுத்தப்பட்டுள்ளமையினை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ஏதுமின்றி இறக்குமதி செய்யப்பட்ட மதுபானத்தினை இலங்கைச் சுங்கம் விடுவிக்கலாகாது.

8. வெளிநாட்டு மதுபானங்களை நாட்டினுள் இறக்குமதி செய்யும் போது அவற்றினை பகுப்பாய்விற்கு உட்படுத்தி (தராதரம் மற்றும் செறிவு பற்றிய) அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். பகுப்பாய்வு அறிக்கையானது இலங்கை இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்படுதல் வேண்டும். மதுவரி ஆணையாளர் நாயகம் பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினைப் பெறுவதற்காக மாதிரி மதுபான இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்கலாம். அவ்வாறே, மதுபான இறக்குமதியின் போது மதுபானங்களின் தராதரங்கள் மற்றும் செறிவு தொடர்பான முழுப் பொறுப்பினையும் மதுபான இறக்குமதியாளர்களே பொறுப்பேற்க வேண்டும். பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினைப் பெறுவது தொடர்பான நிர்ணயங்களை (அளவுகோல்கள்) மதுவரி ஆணையாளர் விதிக்கலாம்.

9. மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட மதுபான இறக்குமதிக்கான உரிமப்பத்திரத்தினை அதற்காக அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரினால் தேவைக்கேற்ப பரிசோதிப்பதற்காக வேண்டப்படும் போது உடனடியாக அதனை சமர்ப்பித்தல் வேண்டும். வெளிநாட்டு மதுபான இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம், அவற்றினை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்காக மதுவரி செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு என்பனவற்றினை மதுவரி உரிமம் வழங்கப்பட்ட வளாகத்தில் (F. L. 3) கோப்பிலிட்டு வைத்திருத்தல் வேண்டும்.

10. மேலே பந்தி இல. 01 இன் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களை மீள் ஏற்றுமதி செய்கையில் அதற்காக அறவிடப்பட்ட இறக்குமதி மதுபான வரி மீளளிப்புச் செய்யப்படலாம். அத்தகைய மீளளிப்பு நடைமுறையானது மதுபானங்களை மீள் ஏற்றுமதி செய்த நாள் முதல் 30 நாட்களுக்குள் இத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுடன் மதுவரி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) மதுபான இறக்குமதிக்காக வழங்கப்பட்ட மதுவரி இறக்குமதி அனுமதிப்பத்திரம் ;
(ii) மதுவரி செலுத்தியுள்ளமைக்கான பற்றுச் சீட்டு ;
(iii) இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்காக மதுவரி செலுத்தியுள்ளமைக்கான சான்று ;
(iv) வார்நாமம்/விமான வழிச்சீட்டு ;
(v) ஏற்றுமதி செய்யப்பட்ட மதுபானங்களுக்கான விலைப்பட்டியல் ;
(vi) சுங்க ஏற்றுமதிப்பத்திரம்.

11. 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதிய 2113/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 02/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

விண்ணப்ப இல. :....................

**அட்டவணை I**

**மதுபான இறக்குமதிக்கான விண்ணப்பப்படிவம்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :-----.
2. தேசிய அடையாள அட்டை இல. அல்லது வியாபாரப் பதிவு இல. :-----.
3. தொலைபேசி இல. :-----.
4. மின்னஞ்சல் முகவரி :-----.
5. விண்ணப்பதாரரின் வியாபார முகவரி :-
6. வரி செலுத்துவோர் அடையாள அட்டை (TIN) இலக்கம் :-----.
7. மதுவரி உரிமம் (F. L. 3) செயற்படுத்தப்படும் பிரதேசத்தின் பெயர் மற்றும் முகவரி :-----.
8. (i) மதுபானத்தின் உற்பத்தி நாடு :----.
   (ii) மதுபானத்தின் இறக்குமதி நாடு :----.
   (iii) முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இலக்கம் மற்றும் திகதி :----.
   (iv) செல்லுபடியாகும் காலம் :----.
   (முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இணைக்கப்படுதல் வேண்டும்).
9. இறக்குமதி செய்யப்படும் மதுபானத்தின் அளவு லீற்றர்களில் :-----.
   மாவூறல் மதுபானம் அல்லது பியர் -
   வைன் -
   ஏனைய வெளிநாட்டு மதுபானங்கள் -
10. மதுபானம் இறக்குமதிக்காக அட்டவணைப்படுத்தப்பட்ட திகதி :-----.
11. ஏனைய விடயங்கள் :

-------------------------
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்**

(இரத்துச் செய்யப்பட்டமைக்கான காரணம்/விசேட நிபந்தனைகள்) ---------------------------------------------------------------

மதுபானத்தினை இறக்குமதி செய்வதற்காக அனுமதி அளிக்கப்படுகிறது/அனுமதி அளிக்கப்படவில்லை/மேலேயுள்ள நிபந்தனைகளின் கீழ் அனுமதி அளிக்கப்படுகிறது.

--------------------------,
மதுவரி ஆணையாளர் நாயகம்.

திகதி :-----.

**அட்டவணை II**

இலங்கை மதுவரி திணைக்களம்

**மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரம்**

1. உரிமதாரரின் பெயர் :......................
2. தேசிய அடையாள அட்டை அல்லது வியாபார பதிவு இல. :.....................
3. வியாபார முகவரி :......................
4. வரி செலுத்துவோர் அடையாள அட்டை (TIN) இலக்கம் :.....................
5. விண்ணப்ப இலக்கம் :...............................
6. மதுபான இறக்குமதி உரிமம் இல. : [ ]

   (i) முன்னீடான பொருள் விபரப்பட்டியல் இல. மற்றும் திகதி :...................
   (ii) செல்லுபடியாகும் காலம் :.................
   (iii) மதுபானத்தின் இறக்குமதி நாடு :..................

7. மதுபானத்தின் வகையும் லீற்றர்களின் எண்ணிக்கையும் :...................

   மாவூறல் மதுபானம் அல்லது பியர் -

   வைன் -

   ஏனைய வெளிநாட்டு மதுபானங்கள் -

8. இறக்குமதி உரிமம் செல்லுபடியாகும் காலம் :.............. திகதி முதல் :.............. வரை :

9. ஏனைய விடயங்கள் .

வெளிநாட்டு மதுபானங்களை நாட்டினுள் இறக்குமதி செய்வதற்காக மாத்திரம் இவ்வனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் என்பதுடன் மதுவரிகளை செலுத்தும் வரை இவ் அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மதுபானங்களை சுங்கத்திலிருந்து விடுவித்தலாகாது.

மேற்குறித்த நிபந்தனைகளுக்கு அமைய மதுபானங்களை இறக்குமதி செய்வதற்கு நான் அங்கீகாரம் வழங்குகிறேன்.

-----
மதுவரி ஆணையாளர் நாயகம்.

திகதி :-----.

## அட்டவணை III

மதுவரி ஆணையாளர் நாயகம்,
மதுவரி தலைமை அலுவலகம்,
கொழும்பு.

### சுங்கச் சான்றிதழ்

மதுவரித் திணைக்களத்தின் ........... ஆம் இலக்க மதுபான இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் .......................... என்ற முகவரியில் வசிக்கும் ............... (உரிமப்பத்திரதாரரின் பெயர்) என்பவரால் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட மதுபானமானது இலங்கைச் சுங்கத்தை வந்தடைந்துள்ளது என இத்தால் அறியத்தருகின்றேன்.

1. கொள்கலன் இல. :-----.
2. மதுபானத்தின் அளவு (தொகை லீற்றரில்) :-----.

    மாவூறல் மதுபானம் அல்லது பியர் -

    வைன் -

    ஏனைய வெளிநாட்டு மதுபானங்கள் -

3. சுங்கப் பிரகடனம் இல. மற்றும் திகதி :............................
4. வரி செலுத்துவோர் அடையாள அட்டை (TIN) இலக்கம் :..............
5. ஏனைய விடயங்கள் :...................

------------------------------------------,
அதிகாரமளிக்கப்பட்ட சுங்க அலுவலரின் கையொப்பம்.

திகதி :-----.

## அட்டவணை IV

### மதுபானத்தினை இடம் பெயர்ப்பதற்கான அனுமதிப்பத்திரம்

அனுமதிப்பத்திர இல. :-----.

1. இறக்குமதியாளரின் பெயர் :..............................................................................................................................
2. அல்லது வியாபார பதிவு இல. அல்லது தேசிய அடையாள அட்டை :.................................................................................
3. வர்த்தக நிலையத்தின் முகவரி :...........................................................................................................................
4. மதுபான இறக்குமதிக்காக வழங்கப்பட்ட மதுவரி உரிம இலக்கம் :.......................................................................................
5. நாட்டினுள் மதுபானத்தினை இறக்குமதி செய்வதற்கான மார்க்கம் (ஆகாய வழி/ கடல்வழி).

6.

| மதுபான இடப் பெயர்விற்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள்/கொள் கலன்களின் இலக்கம் | சுங்கப் பிரகடன இல. மற்றும் திகதி | மதுபான வகை | மதுபானத்தின் அளவு (தொகை லீற்றர்கள்) |
|---|---|---|---|
| | | | |

**அட்டவணை** IV *(தொடர்ச்சி)*

7. மதுபானம் இடப்பெயர்க்கப்படுகின்ற இடத்தின் பெயரும் முகவரியும் :.....................................................................
8. மதுபான இடப்பெயர்விற்காக பயன்படுத்தப்படுகின்ற பாதை :..................................................................................
9. மதுபான இடப்பெயர்வு அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :.....................................................................
10. இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானத்திற்கான மதுவரிச் சான்றிதழ் இல. :..................................................
11. ஏனைய விடயங்கள் :

மேற்குறித்த தொகையளவிலான மதுபானங்களை இடம்பெயர்ப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

.....................................................................................,
அதிகாரம் பெற்ற மதுவரி உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :......................

இடப்பெயர்வு அனுமதிப்பத்திரத்தினைப் பொறுப்பேற்ற நபரின் பெயர் :.........................................
தே. அ. அ. இல. :...........................................................................
கையொப்பம் மற்றும் திகதி :.........................................................

**அட்டவணை** V

**இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்களுக்காக மதுவரி செலுத்தப்பட்டுள்ளமைக்கான சான்று**

இலக்கம் :-----.

இறக்குமதி அனுமதிப்பத்திர இல. :..................................................................................................................
உரிமப்பத்திரதாரரின் பெயர் :........................................................................................................................

| இ. மு. குறியீடு | வகை மற்றும் அளவு (தொகை லீற்றர்) | செலுத்தப்பட்ட வரி ரூபா | பற்றுச் சீட்டு இல. திகதி |
|---|---|---|---|
| | (i) மாவூறல் மதுபானம் அல்லது பியர் :................................................<br>(ii) வைன் :..............................................<br>(iii) ஏனைய வெளிநாட்டு மதுபானம் ................................................... | | |

சுங்கப் பிரகடன இல. மற்றும் திகதி :-
கொள்கலன் இலக்கம் :-
வார்நாமம்/விமான வழிச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :-

..........................................................................................,
திகதி :.............................. அதிகாரம் பெற்ற மதுவரி உத்தியோகத்தரது கையொப்பம்.

*04-530*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.